<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>

<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>

**OS.No:** 5/2017 நாள் 14.07.2025.

வாசா.1, திருமதி.முத்தம்மாள்

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

இந்த வழக்கில் நான் மொத்தம் இரண்டு அயிட்ட சொத்துக்களை காண்பித்துள்ளேன். 1வது அயிட்ட சொத்தானது வீடாகும் அது நெசவாளர் காலனியில் உள்ளது. அதன் கதவிலக்கம் 143 பிளாட் எண்.85. பிராது 2வது அயிட்ட சொத்தானது கீழப்பட்டி சாலியர் தெருவில் உள்ளது. அதன் சர்வே எண்.1818 என்றால் சரிதான். என் அப்பா பெயர் ஆறுமுகம். அவருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி பெயர் முத்தம்மாள். இரண்டாம் மனைவி பெயர் வேலம்மாள். முத்தம்மாள் இறந்த பின்பு தான் வேலம்மாளை அவர் திருமணம் செய்துகொண்டார். முதல் மனைவி முத்தம்மாள் மூலம் பிறந்தவர் தான் 1ம் எதிர்வாதி ஆறுமுகம். நானும் , என் அண்ணன் முத்துச்சாமியும் இரண்டாம் மனைவி வேலம்மாள் மூலம் பிறந்தவர்கள். முத்துச்சாமி உயிரோடு இல்லை என்பதால் தான் 2 முதல் 4 எதிர்வாதிகளை அவரது வாரிசுதாரராக நான் வழக்கில் சேர்த்துள்ளேன். நான் கருப்பசாமி என்பவரை திருமணம் செய்து கொண்டுதற்சமயம் திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அடிக்கடி வருவது உண்டு. தபசில் சொத்துக்களையும் நான் வந்து பார்ப்பது உண்டு. பிராது 2வது அயிட்ட சொத்துக்கு புல எண்கள்.1816, 1817, 1818 ஆகியவைகளாக உள்ளது. பிராது 1ம் அயிட்ட சொத்தானது என் அப்பா கிரையம் வாங்கியதாகும் . பிராது 2வது அயிட்ட சொத்தானது எங்களுடைய பூர்வீக சொத்தாகும். பூர்வீக சொத்தை சாமியப்பன், பரமசிவம், ஆறுமுகம் ஆகியோர்கள் வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தில் தற்பொழுது 1ம் எதிர்வாதி ஆறுமுகம் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். பிராது 1ம் அயிட்ட சொத்தானதை என் அப்பா ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் நெசவு செய்து அதில் வந்த சிக்கன நிதியில் இருந்து 10.02.1992ம் ஆண்டு என் அப்பா பதிவு கிரையம் வாங்கினார். பிராது 1ம் அயிட்ட சொத்தில் வழக்கில் உள்ள 1ம் பிரதிவாதிக்கும் 1/3 பங்கு பாகம்

உள்ளது என்றால் சரிதான். வழக்கில் உள்ள 1ம் எதிர்வாதிக்கு பிராது 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களில் 1/3 பங்கு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர் தனியாக அவருடைய பங்குக்கு நீதிமன்ற முத்திரைக்கட்டணத்தை செலுத்தி வழக்காடி வருகிறார் என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை 2 முதல் 4 எதிர்வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 14th day of July 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.